


**03. 08. 2026**

தலைப்புச் செய்திகள்

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பான சட்டத்திருத்த மசோதா மக்களவையில் இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது.

ஒரகடம், மாம்பாக்கம் சிப்காட் தனியார் தொழில் நிறுவனங்களை முதலமைச்சர் திரு. விஜய் இன்று நேரில் ஆய்வு செய்கிறார்.

காவிரி பாயும் மாவட்டங்களில் ஆடிப்பெருக்கு விழா இன்று பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழக அரசு பள்ளி மாணாக்கருக்கு முறையான மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. ராஜ்மோகன் தொிவித்துள்ளார்.

காவிரி பிரச்சனையில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட உறுதியான நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்க வேண்டுமென்று எதிர் கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

நீட் விவகாரத்தில், போராட்டத்தில் ஈடுபட்ட மாணாக்கர் மீது, காவல்துறையினர் தாக்குதல் நடத்தியதாக கூறப்படுவது உள்ளிட்ட பிரச்சனைகளில் எதிர் கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற

இரு அவைகளும் பிற்பகல் 2 மணி வரை இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தை அவைத்தலைவர் திரு. ஓம்பிர்லா எடுத்துக்கொள்ள முயன்ற போது, நீட் பிரச்சனையை எழுப்பி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் அவை
முதலில் நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவை மீண்டும் கூடியபோது மத்திய புள்ளியியல் திட்ட அமலாக்கத்துறை இணையமைச்சர் திரு. ராவ் இந்தர்ஜித் சிங், இந்திய புள்ளியியல் மசோதா 2026-ஐ இன்று அவையில் தாக்கல் செய்தார்.

புள்ளியியல் அறிவியல் மற்றும் அது சார்ந்த பிரிவுகளில் உலகளாவிய மையமாக இந்திய புள்ளியியல் கல்வி நிறுவனம் உருவெடுப்பதற்கான விரிவான நெறிமுறைகளுக்கு இந்த மசோதா வகை செய்கிறது.

இதேபோல் வங்கியாளர் கணக்குப் புத்தகங்கள் சாட்சிய மசோதாவை மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவையில் தாக்கல் செய்தார்.

நீட் விவகாரத்தில் மத்திய அமைச்சர் திரு. அமித்ஷா பதிலளிக்க வேண்டும் என்று எதிர்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால் மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக அவையில் காமன்வெல்த் போட்டிகளில் வெற்றிவாகை சூடியவர்களுக்கு வாழ்த்து தொ ிவித்த அவைத்தலைவர் திரு. ஓம்பிர்லா, 2030-ம் ஆண்டு காமன்வெல்த் போட்டிகள் குஜராத் மாநிலம் அஹமதாபாத்தில் நடைபெறும் என்று அறிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

மாநிலங்களவை

மாநிலங்களவையில் அவைத் தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் காமன்வெல்த் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணிக்கு வாழ்த்து தொ ிவித்து, நாட்டிற்கு பெருமை ஈட்டித்தந்த வீரர்களை பாராட்டினார்.

பின்னர் பூஜ்ஜிய நேரத்தை அவர் எடுத்துக்கொள்ள முயன்ற போது எதிர்கட்சியினரின் அமளி காரணமாக மாநிலங்களவையும் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பான சட்டத்திருத்த மசோதா 2026 மக்களவையில் இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

இதேபோல் மாநிலங்களவையில் சிறு குறு நடுத்தர தொழில்நிறுவனங்கள் மேம்பாடு சட்டத்திருத்த மசோதா மீதான விவாதம் இன்று நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடம் மற்றும் மாம்பாக்கம் சிப்காட்டில் முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் இன்று நேரில் ஆய்வு செய்கிறார்.

தமிழ்நாட்டில் முதலீடு செய்துள்ள பன்னாட்டு நிறுவனங்களையும் அவற்றின் செயல்பாடுகளையும் அவர் பார்வையிடவுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

தீரன் சின்னமலை

சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் 221-வது நினைவு நாளை ஒட்டி முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் வெளியிட்டுள்ள செய்தியில் அன்னாரது வீரத்தையும், தியாகத்தையும் போற்றி வணங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

இத்தினத்தை ஒட்டி சென்னை கிண்டியில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு தமிழக அரசு சார்பில் மாநில அமைச்சர்கள் திரு. ஆனந்த், திரு. ராஜ்மோகன், திரு. குமார், திரு. ராஜேஷ்குமார்,

தி.மு.க. தலைவர் திரு. மு.க. ஸ்டாலின், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே.பழனிச்சாமி, உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

தீரன் சின்னமலை தூக்கிலிடப்பட்ட சேலம் மாவட்டம் சங்ககிரி கோட்டை அடிவாரத்தில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாநில அமைச்சர்கள் மலர்த்தூவி மரியாதை செலுத்தினர்.

❖❖❖❖❖❖❖❖

அனுப்பிரியா பட்டேல்

உடல் உறுப்பு தான உறுதிமொழி இணையதளம் தொடங்கி

மூன்று ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட உறுதிமொழிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய சுகாதார குடும்பநலத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல் தொிவித்துள்ளார்.

புதுதில்லியில் 16-வது இந்திய உடல் உறுப்பு தான நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், கடந்த 12 ஆண்டுகளில் உடல் உறுப்பு தானம் நம்நாட்டில் அதிகரித்து இருப்பதாக கூறினார்.

உலகளவில் 3-வது உடல் உறுப்புதான நடாக இந்தியா திகழ்கிறது என்று கூறிய அவர், பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு உடல் உறுப்பு தானத்திற்காக நிதியுதவி வழங்கப்படுவதாக தொிவித்தார்.

நாட்டு மக்கள் உடல் உறுப்பு தானம் செய்ய முன்வர வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

உடல் உறுப்பு தானத்தில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தொடர்ந்து நீடிக்கும் தமிழகத்திற்கான விருதை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் பெற்றுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖

வாக்கு எண்ணிக்கை

குஜராத், மத்திய பிரதேசம், பீஹார், மாநிலங்களில் தலா ஒரு சட்டப்பேரவை தொகுதிக்கான இடைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெறும் நிலையில்,

குஜராத் மஞ்சள்பூரில் பி.ஜே.பியும்,

மத்திய பிரதேசம் டாட்டியா தொகுதியில் காங்கிரசும் முன்னிலையில் உள்ளன.

பீஹார் பங்கிப்பூர் தொகுதியில் ஜன் சுராஜ் கட்சித் தலைவர் திரு. பிரசாந்த் கிஷோர் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறார்.

❖❖❖❖❖❖❖❖

ஆடிப்பெருக்கு

ஆடி மாதம் 18-வது தினமான இன்று காவிரி பாயும் மாவட்டங்களில் நீர்வரத்து குறைவாக இருந்தபோதிலும் மக்கள் ஆடிப்பெருக்கு விழாவை பக்தி சிரத்தையுடன் கொண்டாடி வருகின்றனர்.

தர்மபுரி ஒகேனக்கல் காவிரியில் தொடங்கி அதுபாயும் ஈரோடு, சேலம், கரூர், திருச்சி, தஞ்சை, திருவாரூர், மயிலாடுதுறை, நாகை உள்ளிட்ட மாவட்ட நீர்நிலைகளில் தண்ணீர் குறைவாகவே காணப்பட்ட நிலையில் பாரம்பரிய கலாச்சார சிறப்புடன் ஆடிப்பெருக்கு கொண்டாடப்பட்டு வருகிறது.

தர்மபுரியில் புதுமண தம்பதிகள் காவிரி அம்மனை வழிபட்டு இவ்விழாவை கொண்டாடுவதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

ஈரோடு மாவட்டம் பவானி கூடுதுறையில் மக்கள் புனித நீராடி சூரிய பகவானை வழிபட்டனர்.

சேலம் மாவட்ட காவிரிக்கரையில் கிராமங்களை உயிர்ப்பிக்கும் குல தெய்வ வழிபாடு களைக்கட்டியது.

இதில் பங்கேற்ற பொதுமக்கள் பேசுகையில்

.. வாய்ஸ் ..

நாமக்கல் மோகனூர் காவிரி ஆற்றில் ஏராளமானோர் புனித நீராடி பல்வேறு பூஜைப் பொருட்களை ஆற்று நீரில் தூய்மை செய்தனர்.

திருச்சி ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் காவிரி ஆற்றில் தண்ணீர் இல்லாததால் பொதுமக்களும், புதுமண தம்பதியினரின் வருகையும் குறைவாக காணப்படுவதாக எமது செய்தியாளர் தொிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

தஞ்சை கும்பகோணம் மகாமகம், திருமஞ்சன படித்துறைகளில், வீடுகளிலிருந்து குடங்களில் தண்ணீர் எடுத்து வந்து காவிரி தாய்க்கு அபிஷேகம் செய்து மகக்ள் வழிபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

மயிலாடுதுறை காவிரி ஆற்றில் பாரம்பரிய முறைப்படி காப்பரிசி, காதோலை, கருகமணி வைத்து மஞ்சள்கயிறு கட்டி பக்தர்கள் வழிபாடு மேற்கொண்டனர்.

காவேரிக்கரை காவேரியம்மன் ஆலயத்தில் சந்தனகாப்பு அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. வாய்ஸ் ..

நாகை மாவட்டத்தில் காவிரி நீர்நிலைகள் நீரின்றி வறண்டு காணப்படுவதால் ஆடிப்பெருக்கு களையிழந்த நிலையில் விவசாயிகள் கடைமடைப் பகுதிகளில் காவிரி நீர் முறையாக சென்றடைய உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாகையில் மக்கள் தத்தம் வீடுகளில் ஆடிப்பெருக்கை கொண்டாடி வருகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖

ராஜ்மோகன்

தமிழக அரசு பள்ளி மாணாக்கருக்கு முறையான மருத்துவ, உளவியல் பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
திரு. ராஜ்மோகன் தொ◌ிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பள்ளி பாடத்திட்டத்தில் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்ப பிரிவுகளை சேர்ப்பது குறித்து ஆராய துறை சார்ந்த வல்லுநர்கள் குழு அமைக்கப்படும் என்றார்.

அரசு பள்ளிகளில் உள்கட்டமைப்பு மேம்படுத்தப்படும் என்று கூறிய அமைச்சர், மாணாக்கருக்கு புரதச்சத்து உணவுகள் வழங்குவதற்கான நடைமுறைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

மாணாக்கரின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதோடு, தரமான சீருடை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

த.வெ.க தலைமையிலான அரசின் கீழ் விவசாயிகள் அதிகம் பாதிக்கப்படுவதாக எதிர்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

காவிரி பிரச்சனையில் தமிழக அரசை கண்டித்து தஞ்சையில் இன்று நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய அவர், இப்பிரச்சனையில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வலியுறுத்தினார்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்,

பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்,

டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும் என்றும் திரு. உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

தஞ்சையில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. வினரும், விவசாயிகளும் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖

எடப்பாடி கே.பழனிச்சாமி

காவிரி பிரச்சனை மற்றும் மேகதாது அணை விவகாரத்தில் மூத்த சட்ட வல்லுநர்களுடன் ஆலோசித்து தீர்வுகாண தமிழக அரசு முன்வர வேண்டுமென்று அஇஅதிமுக பொதுச்செயலாளர்
திரு. எடப்பாடி கே.பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், முந்தைய அஇஅதிமுக, தி.மு.க. ஆட்சிக்காலங்களில் இதுதொடர்பாக அனைத்துக்கட்சி கூட்டம் நடத்தப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖

வானிலை

நீலகிரி, கோவை, தேனி, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தொிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖